[11th March 1969

திரு. என். ஆர். தியாகராஜன் : டில்லியிலிருந்து உதவி யில்லா விட்டாலும் ராஜ்ய சர்க்காரில் இப்படி வீடு கட்டுகிற திட்டம் இருக்கிறதா ? அப்படி கட்டிக் கொடுக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ராஜ்ய சர்க்காரில் ஏற்கனவே 1,000 ரூபாயில் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் ஒன்று இருந்து அதில் சரியான முறையில் கட்டிக் கொடுக்கிற வீடுகள் நிரந்தரமாக இல்லாத காரணத்தால் கைவிடப்பட்டது. இப்போது புதிய திட்டங்கள் எல்லாம் உருவாக்கப்படுகின்றன. நாளைய தினம் வேறு மன்றத்தில் வருகிற அரிஜனநல மாநியத்தின் கோரிக்கை உரைக்குப் பிறகு அவற்றை வெளியிடுவதாக அரசு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* 184. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that the houses constructed for Harijans between Kallupatti and Kailasapatti on the border of Periakulam Panchayat Union, Madurai district, are lying vacant without any one occupying them during the last two years ; and

(*b*) if so, the reasons therefor?

அரிசன குடியிருப்பு

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு சுகாதார, அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்ட பெரியகுளம் பஞ்சாயத்து ஒன்றிய்பு எல்லையில் கல்லுப்பட்டிக்கும், கைலாசப்பட்டிக்கும் இடையில் அரிசனங்களுக்காக கட்டிய வீடுகள் யாரும் குடியேறாமல் சென்ற இரண்டு ஆண்டுகளாக காலியாக இருப்பது உண்மையா ?

(இ) ஆமெனில், காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) வீடுகள் ஒதுக்கப்பெற்றவர்கள் இந்த வீடுகளில் குடியேறிப் பின்னர் அவ்வீடுகளை விட்டுச் சென்றுவிட்டனர்.

(இ) திருடுபோகுமென்று அஞ்சி அவர்கள் அவ்வாறு காலி செய்து விட்டனர்.

திரு. என். ஆர். தியாகராஜன் : நல்லவர் அவர்களே, சென்ற ஆண்டு அக்டோபர் 2-ம் தேதி பாத யாத்திரை போயிருந்தபோது அந்த வீடுகளைச் சென்று பார்த்தேன். கல்லுப்பட்டி, கைலாசப் பட்டி ஆகிய இரண்டு பெரிய கிராமங்களுக்கும் மத்தியில் இந்த இடம் இருக்கிறது. அது திருடு போகிற இடமல்ல. அங்கே குடியிருக்காத காரணம் அங்கே குடிப்பதற்கு தண்ணீர் கிடைக்க வில்லை என்றுதான் அங்குள்ள அரிஜன மக்கள் கூறுகிறார்கள். ஆகவே தண்ணீர் வசதி, விளக்கு வசதி செய்து கொடுத்தால் அங்கே குடியேறுவார்கள் என்று கூறப்படுகிறது. அதை அரசு கவனிப்பார்களா ?

11th March 1969]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : 1965 மே மாதம் கட்டினார்கள். 6 மாதம் தான் அந்த மக்கள் குடியிருந்தார்கள். அதற்குப் பிறகு இரண்டு இரண்டரை ஆண்டு காலமாக அவர்கள் குடி இருக்கவில்லை. விளக்கில்லை, தண்ணீர் இல்லை என்றால் அப்போதே அவர்கள் சென்றிருக்கவேண்டும். இப்போது எங்கே காலியாக இருக்கின்றன என்பதை சப்-கலெக்டர் சென்று ஆராய்ந்து பார்த்ததில், அங்கே திருடு அதிகமாக வருகிறது என்று அஞ்சி அந்த மக்கள் போய்விட்டதாகக் கூறப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு வேறு காரணங்களும் தெரிந்திருக்கலாம்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, சுகாதார அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல 1,000 ரூபாய்க்கு வீடுகட்டிக் கொடுக்கும் திட்டத்தில் பெரும்பாலான வீடுகள் குடியேறுவதற்கு லாயக்கானதாக இல்லாமல் இருப்பதால், அதைப் போன்ற அடிப்படையில் இப்போது வீடு கட்டிக்கொடுக்கும்போது அவை குடியேறுவதற்குத் தகுதியாக இருக்கும் நிலையில் அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : சில இடங்களில் இப்போது அரிஜன மக்கள் குடியிருக்கிறார்கள். பல வீடுகள் விரைவில் விழுந்துவிட்டதால் குடியிருக்கவில்லை. ரூ. 1,000-க்கு வீடுகள் கட்டும் திட்டத்தை அரசாங்கம் கைவிட்டு, ரூ. 3,000 வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று மத்திய சர்க்கார் துணையோடு நிறைவேற்றலாம் என்று இருக்கிறோம்.

திரு. சி. வி. இராஜகோபால் : 1965-ல் கட்டப்பட்ட வீடுகள் ஒரு மாதம் கூட குடியிருக்க முடியாத அளவில் ஓட்டை உடைசலாக இருந்ததால், பாம்பும், தேளும், நட்டுவாககளியும் இருந்ததால், மக்கள் பயந்துகொண்டு போய்விட்டதாகக் கூறுகிறார்களே, வாஸ்தவமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இருக்கலாம்.

Houses for Harijans

* 185 Q. THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(a) whether there is any proposal to build houses by the State Government for the Harijans of the State, with the subsidy of the Central Government; and

(b) if so, the date of introduction of the scheme?

அரிசனங்களுக்கு வீடு கட்டும் திட்டம்

திரு. கே. தங்கபாண்டியன் : மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—